*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **10 அக்டோபர், 2021**

# பத்திரிகை செய்தி

டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனைக் குழுமம் சார்பில் இன்று (10-10-2021) சென்னையில் நடைபெற்ற "ரெடிகான்" மாநாட்டினை மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் சௌந்தரராஜன் தொடங்கி வைத்தார். மாநாட்டின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு துணைநிலை ஆளுநர் ஆற்றிய உரையின் சுருக்கம்.

- கொரோனா பெருந்தொற்றுக் காலத்திலும் இந்தியாவில் உள்ள மருத்துவமனைகள் தங்களது மருத்துவச் சேவையை தொடர்ந்து ஆற்றி வருகின்றன. மருத்துவர்களும் மருத்துவப் பணியாளர்களும் தன்னலம் பாராமல்-ஓய்வின்றி சேவையாற்றி வருகிறார்கள். இதுவே இந்திய நாட்டின் சிறப்பு.
- நீரிழிவு நோய் மற்றும் ரத்த அழுத்தம் நோய் காரணமாக பார்வை குறைபாடுகள் அதிகம் ஏற்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள கண் மருத்துவமனைகள் சிறப்பான சிகிச்சை அளிப்பதில் முன்னோடியாகத் திகழ்கின்றன.
- நவீன சிகிச்சை முறைகள் மூலமாக கண் குறைபாடுகளை கண்டுபிடித்து சிகிச்சை அளிப்பட்டு வருகிறது. கண் பார்வை திரும்பவும் கிடைக்கும் அளவிற்கு மருத்துவத் தொழில்நுட்பம் வளர்ந்திருக்கிறது.
- பல்வேறு நாடுகளில் இருந்து மருத்துவ சிகிச்சைப் பெறுவதற்காக இந்தியாவிற்கு, குறிப்பாக தமிழகத்திற்கு வந்து செல்கிறார்கள். இது நம் நாட்டிற்கு பெருமையான விஷயம். மருத்துவப் பணியாளர்களின் முயற்சிகளையும் சேவைகளையும் பாராட்டுகிறேன்.